# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## August 18, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தமிழகத்துக்கு தொடர்ந்து காவிரி நீர் திறந்துவிட வேண்டும் என்று கர்நாடகத்துக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.
   i. இது தொடர்பான நீர் மேலாண்மை ஆணையம் பிறப்பித்த உத்தரவு செயல்படுத்தப்படுவதை கர்நாடக அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியது.

2. தமிழகத்தில் உள்ள மனைப் பிரிவில் முதல் மனை மற்றும் அடுக்குமாடிக் குடியிருப்பில் முதல் வீடு விற்பனை ஆவணங்களுக்கு பதிவுத் துறையில் இணையவழியில் வருகையில்லா ஆவணப்பதிவு கட்டாயமாக்கல் நடைமுறையை முதல்வர் ஜோசப் விஜய் சென்னை தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தார்.
   i. பதிவுத் துறையில் ஆவணப்பதிவு நடைமுறைகளை எளிமைப்படுத்த பொதுமக்கள் தாங்களே நேரடியாக இணையவழியில் ஆவணங்களைப் பதிவு செய்யும் முறையை ஏற்கெனவே பதிவுத் துறை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த ஆவணப்பதிவு முறையின் மூலம் பொதுமக்கள் சார்-பதிவாளர் அலுவலகங்களுக்கு நேரில் செல்லாமல் எங்கிருந்தும் எப்போது வேண்டுமானாலும் பதிவுத் துறை இணையதளத்தின் மூலம் இணையவழியில் தங்களது ஆவணங்களைப் பதிவு செய்துகொள்ள முடியும்.

3. காங்கோ குடியரசில் அதிவேகமாகப் பரவி வரும் எபோலா நோய்த்தொற்றுக்கு இதுவரை 2,300-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.
   i. இதன்மூலம், அந்நாட்டின் வரலாற்றிலேயே அதிக உயிரிழப்புகளை ஏற்படுத்திய மிக மோசமான எபோலா பாதிப்பாக இது உருவெடுத்துள்ளது. காங்கோவில் ஏற்படும் 17- ஆவது எபோலா பாதிப்பு இதுவாகும். இதற்கு

முன்பு 2018-2020 காலகட்டத்தில் ஏற்பட்ட பாதிப்பில் 3,481 பேருக்கு நோய்த்தொற்று ஏற்பட்டு 2,299 பேர் உயிரிழந்ததே இதுவரை அதிகபட்சமாக இருந்தது.

4. ஒடிஸா தலைநகர், புவனேசுவரத்தில் சனிக்கிழமை (ஆக. 22) தொடங்கும் உலக தடகள கான்டினென்டல் டூர் சில்வர் மீட்டில் 27 நாடுகலில் இருந்து 143 போட்டியாளர்கள் பங்கேற்கவுள்ளனர்.

5. 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களிடையேயான ஒட்டுமொத்த வேலையின்மை விகிதம் 5.1%-ஆக குறைந்துள்ளதாக மத்திய அரசின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. நிகழாண்டு ஜூன் மாதம் வேலையின்மை விகிதம் 5.5 %- ஆக இருந்த நிலையில் ஜூலை மாதத்தில் வேலையின்மை விகிதம் சற்று குறைந்துள்ளது.

இதுகுறித்து தேசிய புள்ளியியல் அலுவலகம் (என்எஸ்ஓ) வெளியிட்ட ஜூலை மாதத்துக்கான காலமுறை தொழிலாளர் ஆய்வு கணக்கெடுப்பில் (பிஎல்எஃப்எஸ்) தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

i. ஊரகப் பகுதிகளில் 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களிடையேயான வேலையின்மை விகிதம் 4.5 சதவீதமாகவும் நகரப் பகுதியில் 6.7 சதவீதமாகவும் உள்ளது. இதன்மூலம் ஒட்டுமொத்த வேலையின்மை விகிதம் 5.1-ஆக குறைந்தது.

ii. கடந்த ஜூன் மாதத்தில் ஊரகப் பகுதிகளில் 5 சதவீதமும் நகரப் பகுதிகளில் 6.6 சதவீதமாகவும் இருந்தது. கடந்த 2025, ஜூலை மாதத்தை ஒப்பிடுகையில், ஊரக மற்றும் நகரப் பகுதிகளின் ஒட்டுமொத்த ஒட்டுமொத்த வேலையின்மை விகிதம் 2026, ஜூலையில் ஸ்திரத்தன்மையுடன் உள்ளது.

iii. ஆண்-பெண் வேலையின்மை விகிதம்:

- நகரப் பகுதிகளில் 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட ஆண்களின் வேலையின்மை ஒட்டுமொத்தமாக 5 சதவீதமாக குறைந்துள்ளது. கடந்த ஜூன் மாதத்தில் இது 5.3 சதவீதமாக இருந்தது.
- ஊரகப் பகுதிகளில் ஆண்கள் வேலையின்மை விகிதம் 4.6 சதவீதமாக உள்ளது. இது கடந்த ஜூன் மாதத்தில் 4.9 சதவீதமாக இருந்தது. ஜூலை

மாதத்தில் 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட பெண்கள் வேலையின்மை விகிதகம் ஊரகப் பகுதிகளில் 4.5 சதவீதமாகவும் நகரப் பகுதிகளில் 8.8 சதவீதமாகவும் உள்ளது. இது ஜூன் மாதத்தில் ஊரகப் பகுதிகளில் 5 சதவீதமாகவும் நகரப் பகுதிகளில் 8.4 சதவீதமாகவும் இருந்தது.

- ஒட்டுமொத்தமாக ஆண்கள் மற்றும் பெண்கள் வேலையின்மை விகிதம் ஜூன் மாதத்தைவிட ஜூலை மாதத்தில் குறைந்துள்ளது.

iv. தொழிலாளர் பங்கேற்பு விகிதம்:

- 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்கான தொழிலாளர் பங்கேற்பு விகிதம் (எல்எஃப்பிஆர்) 2026, ஜூலையில் 55.4 சதவீதமாக உள்ளது. இது கடந்த ஜூன் மாதத்தில் 54.4 சதவீதமாக இருந்தது.
- கடந்த மார்ச் முதல் மே வரை எல்எஃப்பிஆர் குறைந்த நிலையில், ஜூன் மாதம் எவ்வித மாற்றங்களுமின்றி தொடர்ந்தது. ஆனால் ஜூலையில் அதிகரித்துள்ளது.

v. பணியாளர் மக்கள்தொகை விகிதம்:

ஜூலை 2026-இல் பணியாளர் மக்கள்தொகை விகிதம் (டபுள்யூபிஆர்) 52.5 சத வீதமாக உயர்ந்தது. கடந்த ஜூன் மாதம் இது 51.4 சதவீதமாக இருந்தது எனத் தெரிவிக்கப்பட்டது.

## 6. 2 கடல் பாதுகாவலன் (ஸீ கார்டியன்) நபரில்லா விமானங்களை குத்தகைக்கு எடுக்க அமெரிக்க பாதுகாப்பு நிறுவனமான ஜெனரல் அட்டாமிக்ஸ் நிறுவனத்துடன் ஒப்பந்த மிட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்தது.

1. ஏற்கெனவே குத்தகைக்கு எடுக்கப்பட்ட இரு ஸீ கார்டியன் நபரில்லா விமானங்களை இந்திய கடற்படை இயக்கி வருகிறது. இதுகுறித்து பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'இரு எம் க்யூ-9பி ஸீ கார்டியன் நபரில்லா போர் விமானங்களை ரூ.1,943 கோடிக்கு குத்தகைக்கு எடுக்க ஜெனரல் அட்டாமிக்ஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தமிடப்பட்டுள்ளது. அடுத்த 30 மாதங்களுக்கு இரு நபரில்லா விமானங்களையும் இந்தியா இயக்கவுள்ளது. பாதுகாப்புத் துறையின் கூடுதல் செயலர் மற்றும் தலைமை இயக்குநர் (கொள்முதல்) முன்னிலையில் ஒப்பந்தம் கையொப்பமானது. நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய இந்த இரு நபரில்லா விமானங்களும்

இந்திய கடல் பிராந்தியத்தில் கண்காணிப்பு, ரோந்து உள்ளிட்ட பல்வேறு பணிகளை மேற்கொண்டு இந்திய கடற்படைக்கு மேலும் வலுசேர்க்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

## 7. இந்திய ரயில்வேயில் உள்ள வசதிகள் மற்றும் குடிநீரின் தரம் குறித்த தலைமை கணக்குத் தணிக்கையாளர் (CAG) மேற்கொண்ட சமீபத்திய தணிக்கை குறித்த பகுப்பாய்வு.

(i) CAG தணிக்கை பற்றிய கண்ணோட்டம்

- அடிப்படை வசதிகள், தூய்மை மற்றும் குடிநீரின் தரம் ஆகியவற்றை மதிப்பிடுவதற்காக, நாடு முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட 512 ரயில் நிலையங்களில் CAG விரிவான தணிக்கையை மேற்கொண்டது.
- அதிவேக ரயில்கள், புதிய வழித்தடங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட ரயில் பெட்டிகள் என கடந்த 10 ஆண்டுகளில் இந்திய ரயில்வே குறிப்பிடத்தக்க நவீனமயமாக்கலைக் கண்டிருந்தாலும், பயணிகளுக்கான அடிப்படை வசதிகள் பெருமளவில் புறக்கணிக்கப்பட்டுள்ளதை இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.
- ஒவ்வொரு ஆண்டும், 5,908 நிலையங்களைக் கொண்ட வலையமைப்பில் 7,424 ரயில்கள் மூலம் சுமார் 292.4 கோடி பயணிகள் பயணம் செய்கின்றனர்.

(ii) அடிப்படை வசதிகள் குறித்த அதிர்ச்சியூட்டும் கண்டுபிடிப்புகள்

- தணிக்கை செய்யப்பட்ட 512 நிலையங்களில், 458 நிலையங்களில் (89%) அடிப்படை வசதிகளுக்கான தரநிலைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பது கண்டறியப்பட்டது.
- அடிப்படை வசதிகளை உறுதி செய்வதற்காக ரயில்வே வாரியம் 2018-ல் கடுமையான வழிகாட்டுதல்களை வெளியிட்டிருந்த போதிலும், நாடு முழுவதும் 54 நிலையங்கள் மட்டுமே விதிமுறைகளை முழுமையாகப் பின்பற்றியுள்ளன.
- உள்கட்டமைப்பு குறைபாடுகள்:
- 42% நிலையங்களின் நடைமேடைகள் மற்றும் காத்திருப்பு அறைகளில் மின்விசிறிகள் இல்லை அல்லது உள்ள மின்விசிறிகள் செயல்படாத நிலையில் உள்ளன.
- 13% நடைமேடைகளில் கூரைகள் அல்லது போதுமான நிழற்குடைகள்

இல்லை.

- 15% நிலையங்களில் பயணிகளுக்குப் போதுமான இருக்கை வசதிகள் இல்லை.
- 22% நிலையங்களில் கழிப்பறைகள் இல்லை அல்லது உள்ள கழிப்பறைகள் பயன்படுத்த முடியாத அளவுக்கு மிகவும் மோசமான நிலையில் உள்ளன.

(iii) குடிநீர் தரம் குறித்த முக்கிய கவலைகள்

- நடைமேடைகளில் உள்ள குடிநீர் குழாய்களிலிருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளில் 'ஈ-கோலை' (E. coli) மற்றும் 'கோலிஃபார்ம்' (coliform) பாக்டீரியாக்கள் இருப்பது கண்டறியப்பட்டது.
- கோயம்புத்தூர், பாலக்காடு, ஹைதராபாத், சென்னை (CSMT மும்பை) மற்றும் மதுபூர் உள்ளிட்ட பல முக்கிய நிலையங்களில் அசுத்தமான நீர் இருப்பது கண்டறியப்பட்டது.
- நீர் விநியோகத்தில் இத்தகைய பாக்டீரியாக்கள் இருப்பது உணவு நச்சுத்தன்மை, வயிற்றுப்போக்கு மற்றும் சிறுநீரகம் தொடர்பான பிரச்சனைகள் உள்ளிட்ட கடுமையான உடல்நல அபாயங்களை ஏற்படுத்துகிறது.
- பல நிலையங்களில் நீரில் உள்ள குளோரின் அளவு அனுமதிக்கப்பட்ட பாதுகாப்பு வரம்புகளை விட மிக அதிகமாக இருந்ததை அறிக்கை சுட்டிக்காட்டியது.
- 40% நிலையங்களில் குளிர்ந்த நீர் வழங்கும் இயந்திரங்கள் (coolers) இல்லை; 27% நிலையங்களில் போதுமான எண்ணிக்கையிலான செயல்படும் குடிநீர் குழாய்கள் இல்லை.

(iv) திட்டங்களில் தாமதம் மற்றும் நிதி ஒதுக்கீட்டில் அலட்சியம்

- பயணிகள் வசதிகளை மேம்படுத்துவதற்காகத் திட்டமிடப்பட்ட 395 திட்டங்களில், 59 சதவீதத் திட்டங்கள் நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக முடங்கிக் கிடக்கின்றன.
- நிதி பற்றாக்குறை இதற்கு முக்கியக் காரணம் அல்ல என்பதைத் தணிக்கை அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது; கடந்த ஐந்து ஆண்டுகளில், பயணிகள் வசதிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் 36% முதல் 44% வரையிலான தொகை செலவிடப்படாமலேயே இருந்துள்ளது.
- தூய குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் போன்ற மிக அடிப்படையான தேவைகளே சாதாரணப் பயணிகளுக்குக் கிடைக்காத நிலையில், 'வந்தே

பாரத்' போன்ற அதிநவீன ரயில்களை அறிமுகப்படுத்துவது ஒரு முரண்பாடான சூழலாக உள்ளது.

(v) அமைச்சரின் பதில் நடவடிக்கை

- சிஏஜி (CAG) அறிக்கை வெளியானதைத் தொடர்ந்து, அனைத்து ரயில் நிலையங்களிலும் தூய மற்றும் பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதை உறுதி செய்யவும், அடிப்படை வசதிகள் இல்லாத குறையை நிவர்த்தி செய்யவும் உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் உத்தரவிட்டுள்ளார்.